## குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
# பெருமாள் திருமொழி 8 - மன்னுபுகழ்
## (சக்ரவர்த்தித் திருமகனைக் கௌசலையார் தாலாட்டும் பாசுரம்)

719 * மன்னுபுகழ்க் கௌசலை தன் *
மணிவயிறு வாய்த்தவனே! *
தென்னிலங்கைக் கோன் முடிகள் *
சிந்துவித்தாய்! செம்பொன் சேர் **
கன்னிநன்மா மதிள் புடை சூழ் *
கணபுரத்தென் கருமணியே! *
என்னுடைய இன்னமுதே! *
இராகவனே! தாலேலோ 1

720 புண்டரிக மலரதன் மேல் *
புவனி எல்லாம் படைத்தவனே! *
திண்திறலாள் தாடகை தன் *
உரமுருவச் சிலை வளைத்தாய்! **
கண்டவர் தம் மனம் வழங்கும் *
கணபுரத்தென் கருமணியே! *
எண்திசையும் ஆளுடையாய்! *
இராகவனே! தாலேலோ 2

721 கொங்குமலி கருங்குழலாள் *
கௌசலை தன் குலமதலாய்! *
தங்கு பெரும் புகழ்ச் சனகன் *
திருமருகா! தாசரதீ! **
கங்கையிலும் தீர்த்தமலி *
கணபுரத்தென் கருமணியே! *
எங்கள் குலத்து இன்னமுதே! *
இராகவனே! தாலேலோ 3

722 தாமரை மேல் அயன் அவனைப்
படைத்தவனே! * தயரதன் தன்
மாமதலாய்! * மைதிலி தன்
மணவாளா! ** வண்டினங்கள்
காமரங்கள் இசை பாடும் *
கணபுரத்தென் கருமணியே! *
ஏமருவும் சிலை[1] வலவா! *
இராகவனே! தாலேலோ 4

723 பாராளும் படர் செல்வம் *

---

[1] ஏமருவெம்சிலை

பரத நம்பிக்கே அருளி *
ஆராவன்பு இளையவனோடு *
அருங்கானம் அடைந்தவனே! **
சீராளும் வரை மார்பா! *
திருக்கண்ணபுரத்தரசே! *
தாராளும்[2] நீண்முடி * என்
தாசரதீ! தாலேலோ 5

724 சுற்றம் எல்லாம் பின் தொடரத் *
தொல்கானம் அடைந்தவனே! *
அற்றவர்கட்கு அருமருந்தே! *
அயோத்தி நகர்க்கு அதிபதியே! **
கற்றவர்கள் தாம் வாழும் *
கணபுரத்தென் கருமணியே!
சிற்றவை தன் சொல் கொண்ட *
சீராமா! தாலேலோ 6

725 ஆலினிலைப் பாலகனாய் *
அன்றுலகம் உண்டவனே! *
வாலியைக் கொன்று அரசு * இளைய
வானரத்துக்கு அளித்தவனே! **
காலின்மணி கரை அலைக்கும் *
கணபுரத்தென் கருமணியே! *
ஆலிநகர்க்கு அதிபதியே! *
அயோத்திமனே! தாலேலோ 7

726 * மலை அதனால் அணை கட்டி *
மதிள் இலங்கை அழித்தவனே! *
அலைகடலைக் கடைந்து * அமரர்க்கு
அமுதருளிச் செய்தவனே! **
கலைவலவர் தாம் வாழும் *
கணபுரத்தென் கருமணியே! *
சிலைவலவா! சேவகனே! *
சீராமா! தாலேலோ 8

727 தளை அவிழும் நறுங்குஞ்சித் *
தயரதன் தன் குலமதலாய்! *
வளைய ஒரு சிலை அதனால் *
மதிள் இலங்கை அழித்தவனே! **
களைகழுநீர் மருங்கலரும் *
கணபுரத்தென் கருமணியே! *

[2] தாராரும்

இளையவர்கட்கு அருளுடையாய்! *
இராகவனே! தாலேலோ 9

728 * தேவரையும் அசுரரையும் *
திசைகளையும் படைத்தவனே! *
யாவரும் வந்து அடிவணங்க *
அரங்கநகர்த் துயின்றவனே! **
காவிரி நல்நதி பாயும் *
கணபுரத்தென் கருமணியே! *
ஏவரிவெஞ்சிலை வலவா! *
இராகவனே! தாலேலோ 10

729 * கன்னிநன்மாமதிள் புடை சூழ் *
கணபுரத்தென் காகுத்தன்
தன்னடி மேல் * தாலேலோ
என்றுரைத்த * தமிழ் மாலை **
கொல்நவிலும் வேல்வலவன் *
குடைக் குலசேகரன் சொன்ன *
பன்னிய நூல் பத்தும் வல்லார் *
பாங்காய பத்தர்களே 11

**அடிவரவு:** மன்னு புண்டரீகம் கொங்கு தாமரை பார் சுற்றம்
ஆலின் மலை தளை தேவரை கன்னி வன்தாள்